வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.2754/அ2/2020, நாள் 29.09.2020

- - -

பொருள் : குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக்கல்வி உரிமைச்சட்டம் 2009-ன்படி 2020-2021ஆம் கல்வி ஆண்டில் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் மாணவர் சேர்க்கை - 30.09.2020 அன்று கூட்டம் நடத்திட தெரிவித்தல் - சார்பு.

பார்வை : சென்னை-6, தமிழ்நாடு மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.1000/இ1/2020, நாள் 26.09.2020

- - -

பார்வையில் காணும் மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம் 2009-ன்படி 2020-2021ஆம் கல்வி ஆண்டில் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் 25% அதிகமாக விண்ணபித்துள்ள மாணவர்களில் 01.10.2020 அன்று குலுக்கல் முறையில் மாணவர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். இப்பணிக்கு இணைப்பில் காணும் விவரப்படி அரசு உயர்/ மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள், முதுகலை ஆசிரியர்கள், வட்டாரக்கல்வி அலுவலர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள் பள்ளிக்கல்வித்துறை பிரதிநிதியாக நியமித்து ஆணையிடப்படுகிறது.

மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி மற்றும் மெட்ரிக்குலேஷன் பள்ளி முதல்வர்களுக்கு 29.09.2020 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில் முதன்மைக்கல்வி அலுவலரால் சேர்க்கை தொடர்பான அறிவுரைகள் வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்களும் தங்கள் ஆளுகைக்கு உட்பட்ட குலுக்கல் நடைபெறும் தனியார் சுயநிதி சிறுபான்மையற்ற பள்ளிகளுக்கு பள்ளிக்கல்வித்துறை சார்பாக நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளுடன் 30.01.2020 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு சார்ந்த வட்டாரவள மையங்களில் வட்டாரக்கல்வி அலுவலர் தலைமையில் சார்ந்த வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள் RTE 25% மாணவர் சேர்க்கை சார்பான குலுக்கல் நடத்தும் வழிமுறைகளை வழங்குதல் சார்ந்து கூட்டம் நடத்திடும்படியும், கூட்டம் நடத்தப்பட்ட விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

மேலும், 01.10.2020 அன்று குலுக்கல் நடைபெறும் விவரத்தை இணைப்பில் காணும் படிவத்தில் பூர்த்தி செய்து பள்ளிக்கல்வித்துறை பிரதிநிதி, வருவாய்த்துறை பிரதிநிதி மற்றும் பெற்றோர் கையொப்பத்துடன் சம்மந்தப்பட்ட வட்டாரக்கல்வி அலுவலரிடம் ஒப்படைக்கும்படியும், வட்டாரக்கல்வி அலுவலர்கள் அன்றைய தினமே முதன்மைக்கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

இணைப்பு : பள்ளிக்கல்வித்துறை
பிரதிநிதிகள் விவரம்

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

1) கூடுதல் முதன்மைக்கல்வி அலுவலர்,
   ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, வேலூர்
2) தலைமையாசிரியர்கள்,
   அரசு உயர்/ மேல்நிலைப்பள்ளிகள்
3) முதுகலை ஆசிரியர்கள், அரசு உயர்/ மேல்நிலைப்பள்ளிகள்
4) அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்

நகல்

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு
தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்

இயக்குநர்,
மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்ககம்,
சென்னை-6 - அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது

நகல்

மாவட்டக்கல்வி அலுவலர், வேலூர்